
-----------------------------------------------------------------------------------------------------------------------------------------


இன்பம் பெறும் வழி யாது?
தாயுமானவர்
மன்னார்குடி பானுகுமார்.
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

----------------------------------------------------------------------------------------------------------------------------

# இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்

இன்பம் பெறும் வழி யாது? என்று, பராபர வஸ்துவிடம்- வெட்டவெளியிடம்- அருள்வெளியிடம்- தாயுமானவர் கேட்கிறார்.

“சிந்தை சிதையச் சிதையாத ஆனந்தம்

எந்தவகை யாலேவந்து எய்தும் பராபரமே” (தா.பா.903-பராப.268)

சிந்தை சிதைய வேண்டுமானால் ஆசை அற வேண்டும். ஆசை உள்ளளவும் சிந்தனை ஒடுங்காது. மனம் ஒய்வு பெறாது. ஆனால் ஆசையை எளிதில் விட முடியாது.

எனவே ஆசையை இறைவன் மீது கொள்ள வேண்டும். அந்த வெட்ட வெளியிடம் கொள்ள வேண்டும்.

இறைநிலையை விளக்க வந்த தாயுமானவர் “நிர்விஷய சுத்தமான நிர்விகாரம்” எனச் சொல்லி உள்ளார்.

விஷயப் பற்றுக்கள் ஏதுமின்றி சுத்தாமாய் அமைந்த மாறுபாடு அற்ற பொருள் என்பது இதன் பொருளாகும்.

இந்நிர் விகாரப் பொருள் மீது ஆசை கொண்டால் சிதையும் சிற்றின்ப மயக்கம் நம்மை விட்டு நீங்கும்.

மயக்கம் நீங்கினால் மன மாசு அகன்ற சித்த சுத்தி உண்டாகும். மனம் வெட்டவெளியாகத் தோன்றும்.

---

"இன்புஅருள ஆடை அழுக்கு ஏறும் எமக்குஅண்ணல் சுத்த

அம்பரம்ஆம் ஆடை அளிப்பானோ பைங்கிளியே" (தா.பா.1030-பைங்களி.6)

என தாயுமானவர் இறைஞ்சி உள்ளார்.

அழுக்கேறிய ஆடை மாசடைந்த மனம் ஆகும். அம்பரமாம் ஆடை மனமாசு அகன்ற சுத்த வெட்டவெளி ஆகும்.

வெட்ட வெளியிலே நிற்றலே பேரானந்தத்தை அடைதற்குரிய மார்க்கம் என்பதை மோனகுரு தாயுமானவருக்கு உணர்த்தி இருந்தார்.

எனவே, தாயுமானவர் மனம் வெட்டவெளியாக வேண்டும் என்றும், இறைவன் இதற்கு அருள்செய்ய வேண்டும் என்றும் வருந்திக் கேட்டுள்ளார்.

மன வெளியில் இன்பத்தை அளிப்பது எது? அதைப்பெறுவது எது? என்பதை அறிவது அவசியம்.

வெட்டவெளியில் தனித்து நிற்பது உணர்வு. இது மன அணுக்களில் இருந்து திரட்டப்பெற்ற ஒரு வகை அணுக் கூட்டம் ஆகும்.

நன்கு காய்ச்சிய பாலில் இருந்து கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் போன்றது இந்த உணர்வு.

வெட்ட வெளியில் உணர்வு தனித்து இருக்கும் பொழுது அதனுடன் ஒரு உறவு கலக்க வருகின்றது.

---

கலக்கவரும் உறவின் மீது உணர்வு பாய்கிறது. இந்த உறவே பிரணவ ஒளி என்றும், ஓர் சொல்லின் விளக்கம் என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வொளி பெருகப் பெருக உணர்வினிடம் ஆனந்தம் பெருகுகின்றது.

"உம்பாதருத் தேனு மணிக் கசிவாகி

ஓண்டகடலில் தேன்முதத்து உணர்வுஊறி"

என்கிறார் அருணகிரி நாதர்.

என் அறிவில் ஊறும் ஆனந்த வெள்ளமே என்றும்,

"உனக்கு ஆனந்தம் வேண்டின் அறிவாசிச் சற்றே

நின்றால் தெரியும்.." (ஆனந்க்களிப்பு)

என்று தாயுமானவர் இந்த நிலையை விளக்கினார்.

இவற்றின் மூலம் உணர்வனிடமாக இன்பம் ஊறுகின்றது என்று தெரிகின்றது.

வாசியோகம் செய்வதன் மூலம் விந்தை உள் நாக்கிடமாகக் கொண்டுவந்து ருசித்தலே பேரின்பம் துய்த்தல் எனச் சிலர் சொல்லுகின்றனர்.

விந்தை உள் நாக்கிடமாக ருசிக்கும் பொழுது ரசமாகிய புலன் சம்பந்தப்பட்டிருக்கும்.

புலன் ஒடுங்காதபோது மனம் ஒடுங்கி இராது. மனம் ஒடுங்காத நிலையில் பேரின்பம் உண்டாகாது. இதுவே பெரியோர்கள் கூற்று. ஆகவே மேற்கூறிய சிலர் கூற்று தவறாகும்.

"அஞ்சக்கரம் என்னும் கோடாலி கொண்டிந்த ஐம்புலனாம்

வஞ்சப் புலக் காட்டை வேரற வெட்டி"

என்று பட்டினத்தாரும்,

"அடக்கிப் புலனைப் பிரித்தே - அவன்

ஆகிய மேனியில் அன்பை வளர்த்தேன்" (ஆனந்க்களிப்பு)

என்று தாயுமானவரும்,

"ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்

இன்புறு கருணை இனிதெனக் கருளி"

என்று ஔவையாரும் சொல்லியுள்ள அருள் மொழிகள் இதற்குச் சான்றாகும்.

இன்பம் உணர்வினிடமாகப் பெருகுகின்றது. இந்த இன்பம் குருவின் ஒரு சொல்லின் ஒளியில் இருந்து வருகின்றது.

ஒளியிலிருந்து பெறும் இன்பத்தையே தாயுமானவர் பிறிதொரு பாடலில் சொல்லுகிறார்.

"கற்கண்டோ தேனோ கனிரசமோ பாலோஎன்

சொற்கண்டா தேனதென்றுநான் சொல்லுவேன் - விற்கண்ட

வான மதிகாண மௌனி மௌனத் தளித்த

தானமதில் ஊறும் அமிர்தம்."

மௌனி மௌனத்தை அறிவித்தது ஓர் சொல். அதில் தோன்றியது வானமதி என்னும் அருள்.



அதில் ஊறும் அமிர்தம், கற்கண்டோ, தேனோ, முக்கனிகளின் ரசமோ, பாலோ என்று வார்த்தைகளால் சொல்ல முடியாத இன்பம எனச் சொல்லியுள்ளார் தாயமானவர்.

இறைவன் தன் மெய்யடியார்க்கு எல்லாம் இந்த இன்பத்தை அளித்தனன்.

அவர்கள் இடைவிடாது அவரை நினைந்து, உணர்வு உருகி, மெய்ப்பொருளை நாடி, மனம் நெகிழ, மொழி குளறி, உடம்பு எல்லாம் ஓய்ந்து. அயர்ந்து பரவசமாகும் நிலையில் இறைவன் அளிக்கும் பேனின்ப அநபூதியை உணர்வினிடமாகப் பெற்று அநுபவித்தார்கள்.

சாஸ்திர ஞானம் எவ்வளவு பெற்று இருப்பினும் அருள் நிலையில் நில்லாதவர்களுக்கு இந்த இன்பத்தின் பெருமை உணர முடியாது.

பக்குவம் அடையாத கன்னிகை காமரசத்தை அறியாள். பக்குவம் அடைந்தபின் புருஷனுடன் வாழ்க்கைப்பட்டு கலவியின் இன்பத்தை

அறிந்து "ஊமை கண்ட கனாப் போல, பிறருக்குச் சொல்லாது இருப்பாள்.

சாதகர்களும் மனப்பக்குவம் பெற்று இறை அருளோடு கூடி இருக்கும் காலத்தில் பெறக் கூடிய இன்பம் அவர்களால் பிறருக்குச் சொல்லும் தன்மையானதல்ல".

"கன்னிகை ஒருத்திசிற் றின்பம்வேம்பு என்னினும்

கைக்கொள்வள் பக்குவத்தில்,

கணவன்அருள்பெறின்முனே சொன்னவாறு என்னனக்

கருதிநகை யாவள் அதுபோல்

சொன்னபடி கேட்கும் இப் பேதைக்கு நின்கருணை

தோற்றின் சுகாரம்பமாம்.

சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்

ஜோதியே சுகவாரியே! (தா.பா.77 -சுகவாரி.1)

இந்தப் பாடலில் தாயுமானவர் தன்னை ஒரு கன்னிகைக்கு ஒப்பிட்டு சொல்லியுள்ளார்.

கன்னிப் பருவத்தில் ஒரு பெண் வேம்பென்று கருதிய சிற்றின்பத்தை, புருஷனுடன் வாழத் தொடங்கும் பொழுது விருப்புடன் மேற்கொள்கிறாள்.

அது போல் மனப் பக்குவம் பெறாத தனக்கு பேரின்பம் கிடைக்கின்றது. அருள் பெற்ற பேருக்கு அது சுவைக்கின்றது.

ஆதலின் மனப் பக்குவத்தைக் கொடுத்து அச் சுகானுபவம் பெறக் கிருபை செய்யும் நற்குணக் கடலாயும், ஜோதி வடிவாயும், இன்பக் கடலாயும் இருக்கின்ற இறைவனை விளித்துக் கேட்டுள்ளார் தாயுமானவர்.

“கன்னலுடன் முக்கனியும் கற்கண்டும் சீனியுமாய்

மன்னும் இன்ப ஆரமுதை வாய் மடுப்பது எந்நாளோ,” (தா.பா.)

சுவாமி விவேகானந்தர் அப்போது மேலை நாட்டில் வசித்து வந்தார். அந்நாளில், பெண்மணி ஒருவர் “பேரின்ப நிலையை” விளக்கும்படி விவேகானந்தரிடம் கேட்டார்.

சிற்றின்பத்தைத் தவிர வேறொன்றையும் அப்பெண்மணி அறியார். ஆகையால், அந்த அம்மையாருக்குச் சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு பதில் தந்தார்.

ஒரு பெண்மணிக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தனர். தக்க பருவத்தில் மூத்த குமாரிக்குத் திருமணம் நடந்தேறியது.

அவள் தன் கணவனுடன் இணைந்து வாழ்ந்து வரத் தலைப்பட்டாள். அதைக் கண்ட இளையவள், நீ புருஷனுடன் கூடி வாழ்ந்து வருவதால் பெறும் இன்பம் யாது? என்று கேட்டாள்.

அதற்கு மூத்தவள் நகைத்துத், தக்க பருவம் வரும்போது தன் சகோதரி தானே உணர்வாள் என்று சும்மா இருந்து விட்டாள்.

இளையவளும் தக்க பருவம் அடைந்து திருமணம் செய்து கொண்டு தன் கணவனுட்ன வாழ்ந்து வரும்போது, "நீ இப்போது பெறும் இன்பம் யாது?" என்று மூத்தவள் கேட்க, இளையவள் வெட்கித் தலைகுனிந்து அந்த இடத்தை விட்டு அகன்று விட்டாள்.

இது போன்றேதே பேரின்ப நிலை. பக்குவம் அடையாதவர்களுக்குப் பேரின்ப நிலை விளக்க முடியாதது. அந்த நிலை வந்தவர்கள் தாமே உணர்ந்து கொள்வார்கள். யாரும் அவர்களுக்கு அதனை விளக்க வேண்டியதில்லை.

சிறு குழந்தையிடம் ஒரு விசேஷ குணம் காணப்படும். எதைப் பார்த்தாலும் ஏன்? எப்படி? என்று கேள்வி கேட்கும்.

எல்லாவற்றையும அறிந்து கொள்ள வேண்டும் என்னும் உணர்ச்சி குழந்தையிடம் அதிகம் உண்டு.

ஆனால் கேள்விக்கும் தகுந்த விடையளிள்பின் அதை அறிந்து கொள்ளும் ஆற்றல் அக்குழந்தையிடம் இருக்காது.

ஆகவே உபாயமாகப் பதில் அளித்து அக்குழந்தையினைத் திருப்தி செய்ய வேண்டும்.

அறிவு வளர்ச்சியுறும் போது விஷயங்களை அறிந்து கொள்ளும் ஆற்றலும் மிகும். நுண்ணிய விஷயங்களைக் கிரகிக்கும் சக்தி ஏற்படும்.

மனப்பக்குவம் இல்லாதவர்களுக்கு பேரின்ப நிலையை விளக்குவதும் இந்த தன்மையதே.

இந்தக் காரணத்தால் பேரின்ப நிலையை நாடும் பெரியோரைப் பித்தர்கள் என்றும் அறிவிலிகள் என்றும் மூட நம்பிக்கை கொண்டவர்கள் என்றும் பிதற்றித் திரிவார்கள்.

சத்சங்கத்தில் உறவு கொண்டு அறிவு வளர்ச்சிக்குரிய நூல்களையும் அறிவுரைகளையும் கேட்டபின்பு பேரின்ப நிலையில் சிறிது நாட்டம் கொள்வர்.

தீவீர மனப்பக்கும் ஏற்பட்ட பின் சிற்றின்ப வாழ்வை முற்றிலும் வெறுத்துப் பேரின்ப வாழ்வை நாடிச் செல்வர்.

பேரின்ப வாழ்வை நாடிச் செல்லுதல் என்பது கானகத்திற்குச் செல்லுதல் என்று பொருள்படாது.

சிற்றின்ப வாழ்வை நாடும் மனம், புத்தி. சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களை வெறுத்தலாகும்.

அந்தக் காரணங்களின் தொடர்பு இல்லாத பொழுது அறிவு தனித்து நின்று நித்திய, அநித்திய இன்பங்களை ஆராய்கின்றது.

“........................பரம குருவாய்ப்

போதிக்கும் முக்கண் இறை நேர்மையாய்க்கைக் கொண்டு

போதிப்பதாச்சு அறிவிலே”

என்றபடி நித்தியமான இன்பம் எது என்பது அச்சமயம் இறைவனால் போதிக்கப் படுகின்றது.

---

இப்போதனை பெற்ற பெரியோரை எவரும் அவர் நெறியினின்றும் மாற்ற முடியாது.

“கருமமே கண்ணாயினார்” என்ற வண்ணம் தம் நோக்கம் நிவேறுதலிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பார், இம் முயற்சியில் வெற்றி பெற்றவரே சித்த புருஷர், யோகி, மகாத்மா என அழைக்கப்பட்டனர்.

அந்த நிலையை அடைய இன்றே முயற்சிப்போம். வெற்றி பெறுவோம்.

----------------